1992 மார்ச் 25]

6.7 கிலோ மீட்டரிலிருந்து 7.3 கிலோ மீட்டர் வரை லைனிங் பணி எடுக்கப்பட்டு இருக்கிறது. 1992–93 ஆம் ஆண்டு மீதி இருக்கிற பகுதிகளை எடுத்து லைனிங் வேலை செய்வதற்கு இருக்கின்றோம். பொதுவாக காவிரியை நவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு பெரிய திட்டம் தயாரிக்கப்பட்டு இன்றைக்கு மைய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இதற்கு இடையிலே அந்த வாய்க்கால் பகுதி எல்லாம் சீரமைக்க வேண்டுமென்று இந்த காவிரி வளர்ச்சிப் பணிகள் திட்டக் கோட்டத்தின் மூலம் பல்வேறு பணிகளை இந்த அரசு செய்து கொண்டு இருக்கின்றது. ஆகவே, அந்தத் திட்டத்தின் கீழே இந்த வாய்க்காலை சீரமைக்கும் பணி முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 348, திரு. கே. பி. மணிவாசகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

348—

திண்டுக்கல்—மூணாறு சாலை தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்தல்.

*4765 திரு. கே. பி. மணிவாசகம்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரு மாநிலங்களை இணைக்கும் இச்சாலையின் இன்றியமையாத் தன்மை கருதி திண்டுக்கல்-மூணாறு உடுமலை வழியாகச் செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : உடுமலைப் பேட்டையிலிருந்து மூணாறு செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தும் கருத்துரு தற்சமயம் மாநில அரசிடமோ, மத்திய அரசிடமோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. மணிவாசகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு—கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களை இணைக்கும் திண்டுக்கல், மூணாறு, உடுமலைப்பேட்டை வழியாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1992 மார்ச் 25

செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும்படி நான் இந்தக் கேள்வியைக் கேட்டு இருந்தேன், ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது கருத்துரு இல்லை என்று கூறினார்கள். Nothing is impossible என்று சொல்வார்களே, அந்த வகையிலே மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசால் முடியாதது ஒன்றும் இல்லை. எனவே, உடுமலைப் பேட்டை தொகுதி மக்களின் நன்மை கருதி, அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுமாறு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி வழியாக கோயம்புத்தூர் செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தும் திட்டம் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் ஏற்பட்டு 26—4—1990 அன்று அனுப்பப்பட்டு, 16 சாலைகளில் இந்தச் சாலையும் இடம் பெற்றுள்ளது. உடுமலைப் பேட்டையிலிருந்து மூணாறு செல்லும் சாலை தமிழக எல்லை வரை 29 கிலோ மீட்டர் நீளமும், தமிழக எல்லையிலிருந்து மூணாறு வரை ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் தூரமும் இன்றைக்கு கேரள மாநிலத்தில் உள்ளது. மேலும், திண்டுக்கல், மதுரை, உசிலம்பட்டி, தேனி, போடி வரை செல்லும் சாலையை 1989 ஆம் ஆண்டு தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தி உத்திரவு பெறப்பட்டது. இந்த இரு சாலைகளையும் கேரள மாநிலத்திலிருந்து இணைக்கும் சாலையில் போடி சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கின்றது. ஆகவே உடுமலைப் பேட்டையிலிருந்து மூணாறு செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தும் கருத்துரு தற்போது அரசிடமோ மைய அரசிடமோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்,

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூணாறிலே இருக்கக்கூடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் கன்னியாகுமரி மாவட்டம், திருச்சி மாவட்டம், சேலம் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலே பணியாற்றுகிறார்கள், அவர்கள் தங்களுடைய ஊர்களுக்கு வருவதும், அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைப்பதும் உடுமலைப்பேட்டைக்கு வந்துதான் படிக்க வைக்கிறார்கள். மேலும், அவர்கள் பழனி போன்ற கோயில்களுக்கும் வருகிறார்கள். ஆகவே, வர்த்தக ரீதியாகவும், அவர்களுடைய வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளைக் கருதியும் இந்த மூணாறு-திண்டுக்கல் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றினால் அந்த மக்களுக்கு சிறந்ததாக இருக்கும் என்று கருதுவதால் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அதைச் செய்து

தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு. அதை துரிதமாகச் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் இன்றைக்கு பல்வேறு சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசுக்கு வைத்திருக்கிறோம். நான் ஏற்கனவே சொன்னதைப் போல இந்த இரண்டு சாலைகளுக்கும் இடையேயுள்ள தூரம் 30 கி.மீ. என்ற காரணத்தால் இதை தனியாக நெடுஞ்சாலைத் துறை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுகிற பரிந்துரையை செய்ய இயலாமல் இருக்கிறது. இருந்தாலும் அந்தப் பகுதியில் போக்குவரத்து வசதியை முன்னிட்டு அந்தச் சாலையை சிறந்த முறையில் செப்பனிட்டு போக்குவரத்து வசதி பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்கிற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 349. திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

349—

குளத்தூர் தொகுதியில் குடிநீர் தட்டுப்பாடு

* 334 திரு. சி. குழந்தைவேலு :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி மிகவும் வறட்சிப் பகுதியானதால், குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க வறட்சி நிவாரணத் திட்டம் 1991-ல் 42 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.